# மெலட்டூரில் அரிச்சந்திரா நாட்டிய நாடகம்

தஞ்சை அருகேயுள்ள மெலட்டூரில் நரசிம்ம ஜெயந்தியையொட்டி நடைபெறும் பாகவத மேளா நாடக உற்சவத்தில் அரிச்சந்திரா நாடகம் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாட்கள் இரு பகுதிகளாக நடந்தது. நாடகத்தின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் மயிலாடுதுறை தொகுதி எம்.பி., மணிசங்கர்தம் மனைவியுடன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நம் முன்னோர்கள் பொழுது போக்கிலும் கூட மனதைப் பண்படுத்தும் நல்ல செய்திகளையே தந்திருக்கிறார்கள். இதிகாச, புராணக் கதைகள் பக்தியை மட்டும் ஊட்டவில்லை. மக்கள் நல்வழியில் வாழ கற்றுக்கொடுத்தன. பொய் கூறாத, உண்மையே பேசும் விரதம் பூண்ட சூர்யவம்ச அரசனான அரிச்சந்திரன் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் தனது கொள்கையில் உறுதியாக இருந்தான். இறுதியில் வாய்மையே வெல்லும் என்பதை நிரூபிக்கிறான். நாட்டை இழந்த போதும், மனைவி சந்திரமதியையும் மகன் லோகிதாசனையும் விற்க நேர்ந்த போதும், தன்னையே விற்று அடிமை வேலை செய்ய நேர்ந்த போதும் அவன் மாறவில்லை. இறுதியில் வெற்றி பெறுகிறான்.

ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஜெயந்தி பாகவத மேளா நாட்டிய நாடக சங்கத்தினர் இந்த பாகவத மேளா நாட்டிய, நாடகத்தை இவ்வாண்டும் வெற்றிகரமாக மெலட்டூரில் அரங்கேற்றினர். வழக்கமான மேளப்ராத்தியுடன் முதல் நாள் நிகழ்ச்சி தொடங்கியது. பிரகலாதனில் இரணியனாக கர்ஜித்த குமார் இதில் சத்தியத்திற்காக சோதனைகளுக்கு உள்ளாகி துன்புறும் அரிச்சந்திரனாக உள்ளத்தை உலுக்கினார்.

தேவசபையில் தேவேந்திரன் (அனிருத்தா) சத்தியவான் யார் என்று கேட்க, வசிஷ்டர் சாகேத புரத்து மன்னனான அரிச்சந்திரனே சத்தியவான் என்று கூறுகிறார். விஸ்வாமித்திரர் அவனைப் பொய் கூற வைப்பதாக சபதமிட கதை தொடங்குகிறது. விலங்குகளால் ஏற்பட்டுள்ள தொல்லை குறித்து மக்கள் அரிச்சந்திரனிடம் தெரிவிக்க அவன் மனைவி, மகன், அமைச்சருடன் காட்டிற்கு வேட்டையாட செல்கிறான். சந்திரமதி (இப்பகுதியில் ஸ்ரீகாந்த்) இயற்கையை வியந்து ரசிக்கிறாள். இப்பகுதிக்குப் பின்னணியாக நரசிம்மன் பாடிய அற்புதமான காம்போதி ராக ஆலாபனையும், தொடர்ந்து வெங்கடேசன் பாடிய கந்தார்த்தமும், ஸ்ரீகாந்தின் கற்பனை வளம் மிக்க அபிநயமும் கைதட்டலை பெற்றன.

விசுவாமித்திரரால் அரிச்சந்திரனை மயக்க அனுப்பப்படும் மாதங்க கன்னிகையாக வந்த விஜய்மாதவன் தளுக்கி மினுக்கி அப்பாத்திரத்திற்கு உயிரூட்டினார். விசுவாமித்திரரிடம் நாட்டை இழந்து, மேலும் பணம் தரும் நிலைக்குத் தள்ளப்பட்டு, பணம் கேட்டு நச்சரிக்கும் நட்சத்திரயன் (வரதராஜன்) உடன்வர, தன் மனைவி, மகனுடன் காசிக்கு அரிச்சந்திரன் வந்து சேர்வதுடன் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

இரண்டாம் நாள் முழுவதும் அரிச்சந்திரன் (குமார்), சந்திரமதி (நடராஜன்) ஆகியோரின் துயர வாழ்க்கை நம்முன் நடப்பது போல் இருந்தது. சந்திரமதி தான் படும் கஷ்டங்களை விவரிப்பதும் (இந்த காசி வச்சேகா- புன்னாக வராளி- சாபு) பழைய அரச வாழ்க்கையையும், தற்போதைய வாழ்க்கையையும் ஒப்பிடுவதும் (மேடபை- கானடா; ஏமி சேதுநம்மா- திஸ்ர நடை- ஆதி), குழந்தை வராமல் தவித்த போதும் (பொத்தாயனே- சாமா- ஆதி), குழந்தை இறந்த செய்தி கேட்டு உருண்டு புரள்வதும் அனைவரையும் கண் கலங்க வைத்தன.

சந்திரமதியைப் பிரியும் போதும் (இந்துகுநே- சுருட்டி- ரூபகம்), பிரிந்த பின்னும் (விதி இட்லுஜேஸேகா- நாத நாமக்ரியா- ஆதி), தன்னுடைய தற்போதைய அவலநிலையை நினைத்துத் தவிக்கும் போதும் (ஜெப்பந்ந தேஸாலா- முகாரி) ஒரு கம்பீரமான துயரத்தை வெளிப்படுத்துகிறார் குமார். முகமும், கைகளும் தான் சாதாரணமாக சோகத்தை வெளிப்படுத்தும், கால்களின் நடையும், ஜதிகளும் கூடவா சோகத்தைப் பிழிந்து தரும்!.

காலகௌசிகரின் (நீலகண்டன்) கட்டளைப்படி குழந்தையைத் தர்ப்பை பறிக்க அனுப்பும் சந்திரமதியின் (நடராஜன்) தவிப்பும், இதற்கான பூதேவி நாபிட்ட- (விருத்தம்) போயிரரா- (ரீதி கௌள- சாபு) ஆகிய பாடல்களைப் பாடிய நரசிம்மனின் குரலும், நடராஜனின் தவிப்பும் போட்டி போட்டன. இறந்த தன் குழந்தையை எடுத்துக் கொண்டு இறுதிச்சடங்குகள் செய்ய அரைக்காசு கூட இல்லாமல் இடுகாட்டுக்குச் செல்லும் சந்திரமதியும், அங்கு நிற்கும் அரிச்சந்திரனும் அடையாளம் கண்டு கொண்டு கதறும் போது சோக ரசத்தின் உச்சநிலையை நிகழ்ச்சி அடைந்தது. அந்நிலையிலும் கடமையில் நிற்கிறான் அரிச்சந்திரன்.

இறுதிச் சடங்கிற்காகப் பணம் பெற்றுவரச் சென்ற சந்திரமதி மீது கொலைக் குற்றம் சாட்டப்பட அவள் தலையை வெட்டும் கடமை அரிச்சந்திரனுக்கு ஏற்படுகிறது. அப்போதும் சத்யமே வெல்லும் என்றவாறு கொலை வாளை இயக்க அது சந்திரமதி கழுத்தில் மாலையாக் விழுகிறது. பார்வதியும் (குரு கிருஷ்ணமூர்த்தி), பரமசிவனும் (எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி) தோன்றி ஆசி கூறுகின்றனர். அரிச்சந்திரனை சத்தியம் தவறாதவன் என்று ஒப்புக் கொள்ளும் விசுவாமித்திரர் (நீலகண்டன்) தான் முன்பு பறித்த மகுடத்தை வசிஷ்டரிடம் (வரதராஜன்) கொடுத்து அரிச்சந்திரனுக்கு சூட்டும்படி கூற பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

அற்புதமாகப் பாடிய நரசிம்மன், வெங்கடேசன், பிரபாகரன் மூவரும் குமார், நடராஜன் ஆகியோர் உணர்ச்சிப் பிழம்பாகப் பார்வைக்கு அளித்த விருந்தை காதுக்கு அளித்தனர். பாலாஜியின் மிருதங்கமும், துரையின் வயலினும், வெங்கடேஷ்ப்ரசாத்தின் புல்லாங்குழலும் சிறப்பாக இருந்தன.

நாடகம் முடிந்ததும் சோகமான, சத்தியமான ஒரு வாழ்க்கைப் பாதையில் அவர்களோடு நாமும் தவித்து நடந்து சென்று, அவர்கள் துயரம் தீர்ந்ததும் மகிழும் ஓர் அனுபவ நிறைவு மனதில் தோன்றியது.

-நாரதர்.

## சங்கக் கூட்டம்

திருவெண்காடு, மே 29—

திருவெண்காட்டில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்கக் கூட்டம் தலைவர் டாக்டர் தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

திருவெண்காடு ஸ்டேட் வங்கி மேலாளர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். சங்க அமைப்பு செயலாளர் ஆதிகேசவன் கூட்ட அறிக்கையையும், பொருளாளர் ஆறுமுகம், வரவு, செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். முன்னதாக இலக்கிய குழு தலைவர் கருணாநிதி வரவேற்றார்.

கூட்டத்தில் நூலகத்தில் பணிபுரியும் பணியாளருக்கு சம்பளம் வழங்குவது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துணை செயலாளர் சீனிவாசன் நன்றி கூறினார்.

ஆட்கள் தேவை

எங்களது நிறுவனத்தில்